Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 75

திங்கட்கிழமை
09 பெப்ரவரி 2026

தை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## மழைக்கு சாத்தியம்

யாழ்ப்பாணம், பெப்.9
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை மழைவீழ்ச்சி பதிவாகலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.
நேற்றுமுதல் நாளைமறுதினம் புதன்கிழமைவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழையற்ற வானிலை நில »10

# சங்கிலியன் தமிழ் மன்னன் இல்லை யாழ்ப்பாண இராசதானியும் பொய்!

- வரலாற்றைத் திரிக்கிறது சிங்கள அமைப்பு
- தெளிவுபடுத்துமாறு யாழ். பல்கலைக்கழகத்துக்கு அவசர கடிதம்
- குடைபிடிக்கிறதா கல்வி அமைச்சு?

**யாழ்ப்பாணம், பெப்.9**
**சங்கிலிய மன்னன் தமிழ் மன்னன் அல்ல என்றும், யாழ்ப்பாண இராசாதானி இருக்கவில்லை என்றும் சிங்கள அமைப்பொன்று போர்க்கொடி தூக்கியுள்ளது. இது தமிழர் வரலாற்றைத் திரிவுபடுத்தும் முயற்சியா? என்ற அச்சத்தைத் தமிழ் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.** »11

## கிவுல் ஓயாத் திட்டம் வெலிஓயாவில் கூட்டம்

### இன்று பல்வேறு தரப்புகளும் பங்கேற்கும்

வவுனியா, பெப்.9
வவுனியா வடக்கை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பாக இன்று வெலிஓயாவில் உள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபையில் முக்கியமான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
வன்னி மாவட் »11

## கிவுல் ஓயா திட்டம் மூலம் குடியேற்றங்கள் இல்லை!

### பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க சத்தியம்



கொழும்பு, பெப்.9
கிவுல் ஓயாத் திட்டத்தின் மூலம் வெளிமாவட்டங்களில் இருந்து புதிய குடியேற்றங்களைக் கொண்டுவரப்போவதில்லை என்றும், இந்தத் திட்டத்துக்குள் தமிழர்களையும் உள்வாங்குவதே எமது இலக்காக உள்ளது என்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதிய »10

## யாழ்ப்பாண விமான நிலையம் கடந்த ஆண்டில் புதிய உச்சம்

யாழ்ப்பாணம், பெப்.9
யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் மிகச் சிறந்த ஆண்டாக கடந்த ஆண்டு காணப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2019ஆம் ஆண்டுக்கும் 2023ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி »10

## ஜெனிவாவுக்குச் செல்லவுள்ள விஜித தலைமையிலான குழு



கொழும்பு, பெப்.9
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான சிறப்பு இராஜதந்திரிகள் குழுவொன்று ஜெனிவா கூட்டத்தொடருக்குச் »11

## தேசிய மின்கட்டணக் கொள்கை அமைச்சரவைப் பத்திரம் இன்று

கொழும்பு, பெப்.9
மின்சாரசபை மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் தேசிய மின் கட்டணக் கொள்கை தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் »11

## செம்மணி புதைகுழியில் தேங்கிய வெள்ளத்தை அகற்ற நடவடிக்கை!

யாழ்ப்பாணம், பெப்.9
செம்மணி புதைகுழியில் தேங்கியுள்ள வெள்ள நீர் இன்று நீதிமன்றத்தின் மேற்பார்வையில் வெளியேற்றப்படவுள்ளது.
செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித என்பு எச்சங்கள் தென்பட்டதை அடுத்து கட்டம்கட்டமாக அகழ்வுநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அகழ்வு நடவடிக்கைகளில் நுற்றுக்கணக்கில் மனித என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அகழ்ந்து எடுக்கப்பட்டன. அவற்றில் சிறுவர்களுடையவை »11

## அரசியல் தீர்விலேனும் ஒன்றுபட தமிழ்க் கட்சிகளிடையே சந்திப்பு!

### சுவிட்ஸர்லாந்து தூதரகம் ஏற்பாடு

கொழும்பு, பெப்.9
இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்புக்களை ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கில் சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான விசேட சந்திப்பொன்று எதிர்வரும் »11



முச்சந்தி முரளி

"யாழ்ப்பாண இராசதானி மட்டுமில்லை யாழ்ப்பாணம் எண்ட ஒரு இடமே இலங்கையில இல்லை எண்டு சொன்னாலும் சொல்லுவினம் கண்டியளோ"

## குழு மோதலில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.9
இளவாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் சந்தியில் நேற்று மதியம் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது »11

## பேராசிரியராக பதவி உயர்வு



யாழ்ப்பாணம், பெப்.9
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சசீலா பாலகோபி பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி »11

## இன்று முதல் அதிகரிக்கும் தபால் கட்டணம்

கொழும்பு, பெப்.9
தபால் கட்டணங்களை இன்று முதல் தபால் திணைக்களம் அதிகரிக்கவுள்ளது. குறைந்தபட்ச தபால் கட்டணத்தை 70 ரூபாவாக அதிகரிப்பதற்குத் தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் புதிய கட்டணங்கள் இன்று முதல் நடைமுறைக்குவரும் எனவும் தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான திட்டங்களால் அரசுக்குப் பெரும் ஆபத்து

## ரிஷாத் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா,பெப்.9

**கிவுல் ஓயா போன்று மக்களை வஞ்சிக்கும் மோசமான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுப்பது பெரும் ஆபத்தில் முடியும். எந்தவொரு அரசாங்கமும் செய்யாத ஒரு மோசமான செயலைச் செய்துகொண்டிருப்பது, அவர்களுடைய எதிர்கால அரசியலுக்குப் பேராபத்தாக மாறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**

வவுனியா சாளம்பைக்குளத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மதராசாவை ஆரம்பித்துவைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த தேர்தலில் தற்போதைய அரசாங்கத்துக்கு போஸ்டர் ஒட்டும் வேலைகளைச் செய்தவர்களைப் பிரஜாசக்திக்குத் தலைவர்களாக நியமித்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியைச் சாராத உள்ளூராட்சி உறுப்பினர்கள் குறித்த பிரஜாசக்தியில் தலைவர்களாகவோ அல்லது உறுப்பினர்களாகவோ சேர்க்கப்படாமல் செயற்படுவது சிறுபிள்ளைத்தனமான செயற்பாடு. பேரினவாத சக்திகளுடைய கடந்த காலச் செயற்பாடுகளால், தனிநாடு கேட்டு ஒரு சமூகம் போராடிய வரலாறு உள்ளது. இனமத பேதங்களுக்கு அப்பால் அநுரகுமார திஸாநாயக்க என்ற ஒருவரை ஜனாதிபதியாக்குவதற்காக யாழ்ப்பாணம் தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரை வாழ்கின்ற மக்கள் ஆதரவு தெரிவித்தனர். அதற்கு நன்றிக்கடனாக, உள்ளூராட்சி உறுப்பினர்களை ஒதுக்கிவிட்டு, அந்தக் கட்சிக்கு வால் பிடித்தவர்களை, ஊர்த்தலைவராக நியமிக்கின்ற ஒரு செயற்பாடு இந்த நாட்டின் ஒரு சாபக்கேடே. அதேபோன்று கிவுல் ஓயாத் திட்டம் தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் பாரம்பரியமான ஒரு பெரிய காட்டை அழித்து உருவாக்கப்படவுள்ளது. குறித்த திட்டத்துக்காக பழமையான 5 ஆயிரம் ஏக்கர் காட்டை அழிக்கவுள்ளனர். பேரினவாத இனம் வாழவேண்டும் என்பதற்காக, வேறு மாவட்டத்தில் வாழ்கின்ற பேரினவாத மக்களை இங்கு குடியேற்றம் செய்வதானது, மிகப்பெரிய சதியாகும். சுற்றாடலைப் பாதுகாக்கவேண்டும் என சிந்திப்பவர்கள் இதற்கு எதிராக வழக்குப் போடவேண்டும். கிவுல் ஓயாத் திட்டம் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பாகும். இதற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தமிழ்த்தரப்பு எங்களை அழைக்கவில்லை என்றாலும், எதிர்காலத்தில் எங்கள் கட்சியும் பூரண ஆதரவை வழங்கும்-என்றார். (க-110)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 08.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | 0807 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| T | 2 2 0 5 4 8 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3073 | W | 25 26 27 54 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 02 25 72 76 | 5234 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 08.02.2026 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0903 | 08 37 50 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 02 08 18 44 | 4785 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 08.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 34 | 17 31 41 65 | 2249 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.02.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 06 08 27 57 | 2899 |



# மலையக மக்களின் நிலை பிரித்தானியாவே பொறுப்பு

## மனோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,பெப்.9

மலையகத் தமிழர்களை இலங்கைக்கு அழைத்துவந்தவர்கள் என்ற ரீதியில், அவர்களின் தற்போதைய நிலைக்குப் பிரித்தானியா வரலாற்று ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் பொறுப்பேற்கவேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக்கை சந்தித்துக் கலந்துரையாடிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

'டித்வா' சூறாவளிக்குப் பின்னரான அரசாங்கத்தின் 50 இலட்சம் ரூபா தேசிய வீட்டு மறுசீரமைப்புத் திட்டத்திலிருந்து மலையக மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். மலையக மக்களைத் தேசிய திட்டங்களுக்குள் உள்ளீர்க்காமல், இந்திய உதவித் திட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவது அவர்களை இரண்டாம் தர பிரஜைகளாக நடத்துவதாகும். அடுக்குமாடிக் குடியிருப்புகளைத் திணிப்பதன் மூலம் மலையக மக்களின் நில உரிமையை அரசு தட்டிப்பறிக்க முயல்கிறது. இதனை தமது கூட்டணி வன்மையாக எதிர்ப்பதுடன், மக்களுக்குச் சொந்தமான காணி உரிமையுடன் கூடிய வீடுகளையே கோருவதாகவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டினார். (ச-இ)

### ஜனாதிபதி செயலகத்துக்கு முன்

# 4ஆவது நாளாகத் தொடர்கிறது கரைவலை மீனவர் போராட்டம்

கொழும்பு,பெப்.9

கரைவலை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக்கோரி, கரைவலை மீனவர்கள் மேற்கொண்டுவரும் சத்தியாகிரகப் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் தொடர்கின்றது.

கடந்த பெப்ரவரி 5ஆம் திகதி முல்லைத்தீவு மற்றும் கொக்கிளாய் உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த கரைவலை மீனவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

மீன்பிடி உபகரணங்களைக் கடற்கரைக்கு இழுப்பதற்கு உழவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான தடையை நீக்கவேண்டும் என்பதே இவர்களின் கோரிக்கையாகும். மீன்பிடி அமைச்சின் தகவல்களின்படி, கரைவலை மீன்பிடி ஒழுங்குவிதிகளை மீறிச் சில இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படுவதாகவும், அதனாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 24 மணிநேரத்தில் 500 பேர் கைது!

கொழும்பு,பெப்.9

பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நாளாந்த விசேட சோதனை நடவடிக்கைகளில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 526 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் இதில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 144 பேரும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

# எப்ஸ்டீன் ஆவணங்களில் 188 இடங்களில் 'இலங்கை'

கொழும்பு, பெப்.9

சர்ச்சைக்குரிய அமெரிக்கத் தொழிலதிபர் ஜெப்ரி எப்ஸ்டீன் தொடர்பான ஆவணப்பட்டியலில், 'இலங்கை' என்ற பெயர் 188 தேடல் முடிவுகளில் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எப்ஸ்டீன் தொடர்பான மின்னஞ்சல்கள், பயணத் தொடர்புகள், தொடர்பாடல் குறிப்புகள் மற்றும் மூன்றாம் தரப்பினருடனான உரையாடல்களில் இலங்கையின் பெயர் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எப்ஸ்டீன் தொடர்பான மின்னஞ்சல்கள், பயணப் பதிவுகள் மற்றும் உரையாடல்களில் இலங்கையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவை எப்ஸ்டீனின் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவை அல்ல எனத் தெரிய வந்துள்ளது.

எப்ஸ்டீனின் சட்டவிரோத வலையமைப்பில் இலங்கை ஒரு முக்கியமான மையமாக இருந்ததற்கோ அல்லது அவரது குற்றச்செயல்களுடன் நேரடித் தொடர்பு இருந்ததற்கோ எந்தவொரு ஆதாரமும் இந்த ஆவணங்களில் இல்லை. அந்தவகையில் இலங்கையைப் பொறுத்தவரை அவை பெரும்பாலும் தற்செயலான நிகழ்வுகளாகவே வகைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கரவண்டிகள் ஒழுங்குக்கு இனிச் செயலிமுறை கட்டாயம்!

**கொழும்பு, பெப்.9**
**இலங்கையில் உள்ள அனைத்து முச்சக்கரவண்டிகளும் இனிச் செயலி (Mobile App) அடிப்படையிலான கட்டமைப் பின்கீழ் இயங்குவதைக் கட்டாயமாக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.**

நாடு முழுவதும் ஒரே மாதிரியான சேவைத் தரத்தைக் கொண்டுவருதல், பயணிகள் ஏமாற்றப்படுவதைத் தடுத்து, தூரத்துக்கு ஏற்ற நியாயமான கட்டணத்தை உறுதிசெய்தல், டிஜிற்றல் முறையில் பயணங்களைக் கண்காணிப்பதன் மூலம் பயணிகளின் பாதுகாப்பை அதிகரித்தல், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும்சாரதிகளை ஒருஒழுங்கு முறைக்குள் கொண்டுவருதல் என்பன இந்தத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

இதுகுறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா தெரிவிக்கையில்,

முச்சக்கரவண்டிகள் தற்போது டாக்ஸி (Taxi) வகையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எனவே இவை அனைத்தும் செயலி அடிப்படையிலான முறைமையின்கீழ் இயங்கவேண்டும். ஏற்கனவே பல தனியார் நிறுவனங்கள் இந்தச் சேவையை வழங்கி வரும் நிலையில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிர்ணயித்துள்ள விதிகள் மற்றும் தரங்களை இவை கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும். இதன் மூலம் முச்சக்கரவண்டி போக்குவரத்துத்துறை ஒரு நவீன டிஜிற்றல் மாற்றத்தை நோக்கி நகரவுள்ளது- என்றார். (ச-இ)

## இலவங்கப்பட்டையால் 260 மில்லியன் டொலர்

கொழும்பு,பெப்.9
இலவங்கப்பட்டை தயாரிப்புகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் கடந்த ஆண்டில் 260 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக இலவங்கப்பட்டை அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் 300 மில்லியன் அமெரிக்க டொலர் இலக்கை அடைவதற்குத் எதிர்பார்ப்பதாகவும் அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர தெரிவித்தார். இலங்கையின் வரலாற்றில் இலவங்கப்பட்டை சார்ந்த தயாரிப்புகள்மூலம் ஈட்டப்பட்ட அதிகூடிய வருமானமாக இது கருதப்படுகிறது.

இலங்கை இதற்கு முன்னர் சுமார் 70 நாடுகளுக்கு மாத்திரமே ஏற்றுமதி செய்திருந்த போதிலும், 2025ஆம் ஆண்டில் 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்குத் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்துள்ளதாகவும் ஜனக லிந்தர குறிப்பிட்டார். (ச-இ)

'க்ளீன் சிறிலங்கா' திட்டத்தில்

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடமாடும் நூலக வாகனங்கள்

கொழும்பு,பெப்.9
'க்ளீன் சிறீலங்கா' தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாக, அடிமட்ட அளவில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் 'அருணு துர' தேசிய வாசிப்பு மேம்பாட்டுத்திட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மேல் மாகாணத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 10 உள்ளூராட்சி மன்றங்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய நடமாடும் நூலக வாகனங்கள் மற்றும் 9,300 புத்தகங்கள் இதன்போது பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதுகுறித்து மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் தெரிவிக்கையில், புதிய சமூகத்தைக் கட்டியெழுப்ப சமூகப்புரிதல் அவசியம். கிராமங்கள் தோறும் புத்தகங்களைக் கொண்டு செல்வது ஒரு அழகான கலாசாரச் செயல்முறை. இந்தத் திட்டம் பாடசாலை மாணவர்கள் மற்றும் கிராமப்புற மக்கள் நவீன நூலக வசதிகளை இலகுவாக அணுகுவதை உறுதிசெய்கிறது. இந்தத் திட்டத்தை எதிர்காலத்தில் நாடு முழுவதும் விரிவுபடுத்த அரசாங்கம் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-இ)

## 6ஆவது ஆண்டில் ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு,பெப்.9
ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஆரம்பிக்கப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, நேற்று பல்வேறு சமய மற்றும் கட்சி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

கட்சியின் 6ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கதிர்காமத்தில் விசேட ஆசிர்வாத பூசைகள் மற்றும் சமய வழிபாடுகள் நடைபெற்றன. இதில் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளனர். 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சஜித் பிரேமதாஸ தலைமையில் இந்தக் கட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. (ச-இ)

## குடியிருப்பாளர் பாதுகாப்பு: சட்டவரைவு இடைநிறுத்தம்

கொழும்பு,பெப்.9
இலங்கையில் வாடகைக்கு குடியிருப்பவர்களைப் பாதுகாப்பதற்காக முன்மொழியப்பட்ட 'குடியிருப்பாளர்கள் பாதுகாப்புச் சட்டமூலம்' தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் சுனில் வட்டகல நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சட்டமூலத்திலுள்ள சட்டரீதியான விடயங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து மேலும்ஆராயவேண்டியுள்ளதால், அரசாங்கம் இதனைத் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.

அரசாங்கம் ஜனநாயகக் கொள்கைகளின்படி பொது மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதாகவும், இதற்காக வழங்கப்பட்ட கால அவகாசத்தில் பெறப்பட்ட ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)




## ஒப்பிரேசன் இனிமேல் சிம்பிள்!

'பாம்பெண்டால் படையும் நடுங்கும், ஒப்பிரேசன் எண்டால் ஊரே கலங்கும்'-இது எங்கட சனத்திட்ட இருக்கிற ஒரு பொதுவான பயம். ஏனெண்டால், ஒப்பிரேசன் எண்டாலே நாலைஞ்சு நாளைக்கு முந்தியே வார்ட்டில போய் அட்மிட் ஆகோணும். ஒப்பிரேசன் முடிஞ்ச பிறகும் அந்த-வருத்தக்காரருக்கும், மருந்து மணத்துக்கும் நடுவில கிழமைக்கணக்கில -காயம் மாறுகிற வரைக்கும் கிடக்கோணும். வீடுக்காரரும் சாப்பாடு, தண்ணி, ஹோர்லிக்ஸ் எண்டு மூண்டு நேரமும் தூக்கிக்கொண்டு அலைஞ்சு அலைஞ்சே பாதி வருத்தத்தில விழுந்துடுவினம். ஆனால், இனிமேல் அப்பிடியெல்லாம் ஒப்பிரேசன் எண்டபேரில 'ஆயுள் தண்டனை' அனுபவிக்கத் தேவையில்லை எண்டால் நம்புவீங்களோ?

நம்பித்தான் ஆகோணும்! யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமருத்துவபீடமும் சேர்ந்து 'நாள் சத்திரசிகிச்சை நிலையம்' (JDSC) எண்ட பேரில ஒரு மந்திரவித்தையை மின்னாமல் முழங்காமல் செய்திருக்கினம். இதுக்கு IMHO, JMFOA எண்ட சர்வதேச அமைப்புகளும், வெளி நாட்டில இருக்கிற எங்கட சொந்தங்களும் தான் சப்போர்ட் பண்ணியிருக்கினம்.இந்த 'டே சர்ஜரி' (Day Surgery) எண்டால் என்னவெண்டு கேக்கிறீங் களோ? விடிய ஆஸ்பத்திரிக்குப் போனால், ஒப்பிரேசனை முடிச்ச 24 மணித்தியாலத்துக்குள்ள பெட்டியைக் கட்டிக்கொண்டு வீட்டை வந்திடலாம். கிழமைக் கணக்கில வார்ட்டில படுத்திருக்கேக்க மற்றவையின்ர வருத்தத்தைப் பாக்கேக்க எங்களுக்கு வருத்தம் இல்லாட்டிக்கூட வந்திடுமோ எண்டு பயமாக் கிடக்கும். அதோட ஆஸ்பத்திரிக் கிருமி எங்களுக்கும் ஒட்டிடுமோ எண்டும் நடுக்கமா இருக்கும். இனி மேல் அந்தத் தலைவலியொண்டும் இல்லாமல் ஒப்பிரேசன் முடிஞ்சகையோட வீட்டை போய், வீட்டுசாப்பாடு, சுவாத்தியத்தோட நாங்கள் நினைச்ச மாதிரி 'ரெஸ்ட்' எடுக்கலாம்.

ஒப்பிரேசன் எண்டபேரில முந்தியெல்லாம் பெரிய பெரிய தழும்பு வர்ற மாதிரி வெட்டித் தைச்ச காலம் போய், இப்ப 'லப்பிரோஸ்கோப்பி' (Laparoscopy) எண்ட நுண்துளை முறையில நவீனமாச் செய்யிறதால காயமும் டக்கெண்டு மாறிடும். இவ்வளவு காலமும் பிரைவேட் ஆஸ்பத்திரியளில காசை அள்ளிக் குடுத்துச் செய்த உந்த ஒப்பிரேசன்களை, இனிமேல் எங்கட பெரியாஸ்பத்திரியில இருக்கிற 'நாள் சத்திரசிகிச்சை நிலையத்தில' அதே தரத்தோட காசே குடுக்காமல் செய்யலாம்.மயக்க மருந்து குடுக்காமல் செய்யிற சின்னச் சின்ன ஒப்பிரேசன்களை இப்ப செய்யத் தொடங்கியிருக்கினம். போகப் போக இன்னும் வசதியள் வரும்.அப்ப எல்லா ஒப்பிரேசன்களையும் இஞ்சையே செய்யிற காலமும் வரும். வார்ட்டில 'வாழ்க்கை' நடத்தின காலம் முடிஞ்சு, ஒரே நாளில ஒப்பிரேசனை முடிக்கிற காலம் வந்திட்டுது. இப்பிடி ஒரு நல்ல விசயத்தைச் செய்த பெரியாஸ்பத்திரிக்காரருக்கும், டொக்டர்மாருக்கும், மருத்துவபீடத்துக்கும் அதுக்கு சப்போர்ட் பண்ணினவைக்கும், சனத்தின்ர சார்பில ஒரு 'சல்யூட்'!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறந்த கணக்கு முகாமைத்துவத்துக்கான வருடாந்தச் சிறப்பு விருது, வலிகாமம் வடக்குப் பிரதேசசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த விருதை வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் பெற்றுக்கொண்டார். (க-66)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப் புதிய சப்த தள இராஜகோபுரக் கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ.நாகேந்திர திவாகரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் இராஜகோபுரக் கும்பாபிஷேகக் கிரியைகளை ஆற்றினர். (க-66)



## சிரமதானம்

யாழ்ப்பாணம், பெப்.9

மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு இலங்கை சைவசமயப் பேரவையின் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த யாழ்.பயிற்சிமைய மாணவர்களால் கீரிமலை குழந்தைவேற் சுவாமிகள் சித்தர்பீடப் பகுதியில் சிரமதான நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. அகில இலங்கை சைவமகாசபையினரின் நெறிப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்ட பணியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களிலிருந்து வருகைதந்த மாணவர்கள் கலந்துகொண்டனர். (41-66)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம்,பெப்.9

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு கல்லூரி மைதானத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி முதல்வர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம்கல்விவலய ஆசிரிய ஆலோசகர் செ. பாஸ்கரன் கலந்துகொள்வார். (க-63)



## சித்தமழகியர் அரங்கம் – புங்குடுதீவில் இன்று!

யாழ்ப்பாணம்,பெப்.9

வேலணைப் பிரதேச செயலக சமூக சேவை அலகும் புங்குடுதீவு நலன்புரிச் சங்கமும் இணைந்து நடத்தும் 'சித்தமழகியர் அரங்கம் 2026' இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புங்குடுதீவு நலன்புரி நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. உதவிப் பிரதேச செயலர் திருமதி பாமா மோகனமுரளி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதியோர்களைக் கௌரவித்தல், இளையோரை வலுப்படுத்தல் என்பன இடம்பெறவுள்ளன. (ச-9)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,பெப்.9

காரைநகர் மருதடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நூதன பஞ்சதள ராஜகோபுர சகித மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை காலை 9.16 மணி தொடக்கம் 11.15 மணி வரையான நேரத்தில் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை கர்மாரம்பமும், எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பும் இடம்பெறும். தொடர்ந்து 28 தினங்களுக்கு காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை மண்டலாபிஷேகம் நடைபெறும். (க)

## திருக்கேதீச்சரத்தில் சிவதீட்சை நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.9

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினுடைய சைவசித்தாந்த அறக்கட்டளையும் திருவாசகமடமும் இணைந்து வழங்கும் சிவதீட்சை நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் காலை 7 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணிவரை அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா. கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு ஸ்ரீ சக்திக்கிரியாகுருமணி சைவாகமபூசணம் சிவஸ்ரீ இ.குமாரசுவாமி குருக்கள் தீட்சை வழங்கவுள்ளார். தீட்சை பெறுவோர் 0777197067, 0770783222 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்காலத்துக்குப் பயன்தரும் வகையில் முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள்மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மன வருத்தங்கள் நீங்கும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள்மூலம் கிடைக்கும் செய்தி அளவற்ற மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**துலாம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**மகரம்:** சகோதரர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குத் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண இலாபம் உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல்ஆரோக்கியத்தில்கவனம் தேவை. சிலருக்குத் தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**உண்மை - நேர்மை - அஞ்சாமை**

## ஆணுக்கு பெண்ணிங்கே சரிநிகர்!

இலங்கை போக்குவரத்துச்சபையின் வரலாற்றில் பெப்ரவரி 6ஆம் திகதி என்பது ஒரு பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய தினமாகும். மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தில், சிவப்பு வர்ணச் சீருடை அணிந்த 20 பெண் நடத்துநர்கள் தங்களின் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்ட நிகழ்வு, வெறும் வேலைவாய்ப்பு வழங்கல் மட்டுமல்ல; அது ஆணாதிக்க நிர்வாகக் கட்டமைப்பின் கோட்டையாக இருந்த பொதுப்போக்குவரத்துத் துறையில் சமத்துவத்தின் கதவுகளைத் திறந்துவிட்ட ஒரு புரட்சிகரமான நகர்வாகும். வெகுஜன ஊடகத் துறைப் பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் அரங்கேறிய இந்த மாற்றம், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பாலின சமத்துவத்தை நடைமுறை ரீதியாக முன்னெடுப்பதற்கான ஒரு காத்திரமான சான்றாக அமைந்துள்ளது. நீண்டகாலமாக ஆண்களின் ஏகபோக உரிமையாகக் கருதப்பட்ட பேருந்து நடத்துநர் பணியில் பெண்களை இணைப்பது என்பது, இலங்கையின் சமூக நிர்வாகக் கட்டமைப்பில் பெரும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தத் தவறவில்லை.

பொதுப்போக்குவரத்தில் பயணம் செய்யும் பெண் பயணிகள், குறிப்பாகப் பாடசாலை மாணவிகள், வேலைக்குச் செல்லும் பெண்கள், பேருந்துகளுக்குள் அடிக்கடி எதிர்கொள்ளும் பாலியல் ரீதியான சீண்டல்கள் மற்றும் அசௌகரியங்கள் என்பன, இத்தகைய பெண் நடத்துநர்களின் வருகையால் பெருமளவு குறையும் வாய்ப்புள்ளது. பெண்களின் இயல்பான பொறுமை, கனிவான அணுகுமுறை மற்றும் நிர்வாகத் திறன் என்பன பயணிகளுக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் கண்ணியமான பயண அனுபவத்தை வழங்கும். பணப் பரிமாற்றங்களில் நிலவும் வெளிப்படைத்தன்மை, நேர முகாமைத்துவம் போன்றவற்றில் பெண்கள் அதிக அக்கறை காட்டுவார்கள் என்பதால், நட்டத்தில் இயங்கும் இலங்கை போக்குவரத்துச்சபைக்கு இந்த நடவடிக்கை புத்துயிரைக் கொடுக்கக்கூடும். இது பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதோடு, எந்தப்பணியும் பெண்களுக்குச் சவாலானதல்ல என்ற சமூக விழிப்புணர்வையும் ஏற்படுத்தும்.

இருப்பினும், இந்தப் புதிய பயணத்தில் சில சவால்களும் பாதகமான சூழல்களும் இல்லாமலில்லை. அதிகாலை மற்றும் நள்ளிரவு நேரப்பணிகள், நீண்ட தூரப் பயணங்கள் மற்றும் சில பயணிகளிடம் காணப்படும் முரண்பாடான நடத்தைகள் என்பன பெண் நடத்துநர்களுக்குப் பாதுகாப்பு ரீதியான அச்சத்தைத் தோற்றுவிக்கலாம். அத்துடன், பேருந்துத் தரிப்பிடங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் பெண்களுக்குரிய அடிப்படை வசதிகள் (குறிப்பாகத் தனிப்பட்ட சுகாதார வசதிகள்) இன்னும் போதியளவில் இல்லை என்பதே கசப்பான உண்மை. இத்தகைய உட்கட்டமைப்பு குறைபாடுகளைச் சரிசெய்யாமல் பெண்களைப் பணியில் அமர்த்துவது அவர்களுக்கு மேலதிக அழுத்தத்தையே கொடுக்கும். அதேவேளை, பாரம்பரியச் சிந்தனை கொண்ட சமூகத்தினர் இப்பணியை ஒரு பெண்ணுக்குரியதாகப் பார்க்கத் தவறுவதும் ஒரு உளவியல் சவாலாக அமையும். பெண்களை நடத்துநர்களாக அறிமுகப்படுத்திய இலங்கை போக்குவரத்துச்சபை, அவர்களுக்குத் தேவையான சட்டப் பாதுகாப்பு மற்றும் களப்பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்த வேண்டும். சக ஆண் ஊழியர்களின் ஒத்துழைப்பும், பொதுமக்களின் கௌரவமான பார்வையும் இவர்களின் வெற்றிக்கு இன்றியமையாதவை. பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும்போது, அந்தத்துறை இன்னும் மெருகடையும் என்பது உலகளாவிய உண்மை. அந்த வகையில், இலங்கை போக்குவரத்துச்சபையின் இந்தப் புதிய 'சிவப்புச் சீருடைப் புரட்சி' வெற்றியடைய வேண்டுமானால், அது நிர்வாக ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முழுமையாகத் தழுவப்படவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





### பொய்யாமொழி

**செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி**

**பொருள்:** ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத் தக்கது அறமே, செய்யாமல் காத்துக்கொள்ளத் தக்கது பழியே.




## கூட்டுறவில் அதிக கொள்வனவு; நுகர்வோருக்கு ஆயுள் காப்புறுதி

வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு,பெப்.9**

**கூட்டுறவு விற்பனை நிலையங்களில் ஒரு மாதத்துக்குள் 10,000 ரூபாவுக்கும் அதிகமான பொருள்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோருக்கு 3 இலட்சம் ரூபா பெறுமதியான இலவச ஆயுள் காப்புறுதி வழங்கப்படும் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

கூட்டுறவு ஊழியர்களுக்குத் திருப்திகரமான சம்பளம் மற்றும் ஆயுள் காப்புறுதி உள்ளிட்ட வசதிகளை வழங்கி, இந்தக் கூட்டுறவு இயக்கத்தைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். கூட்டுறவு இயக்கத்தை 'திசைகாட்டி'யின் மறுசீரமைப்புத் திட்டத்தின் ஊடாக முன்னெடுத்து வருகிறோம். அதன் ஊடாக ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு 'கோப் சிட்டி'யை ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்போம். அத்துடன் நகரப்பகுதிகளில் கோப் சிட்டிகளைப் பராமரித்துச் செல்வதற்குத் தேவையான கடன் தொகையை, குறைந்த வட்டியின்கீழ் வழங்க நடவடிக்கை எடுப்போம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## மின்சாரம் தாக்கி தாய், மகள் சாவு

கொழும்பு,பெப்.9

கலஹா - கிரிபோக ஹைன்ன பகுதியில் மின்சாரம் தாக்கியதில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது. உயிரிழந்தவர்கள் 46 வயதுடைய தாயும், 13 வயதுடைய மகளும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கறிவேப்பிலை மரத்தில் கறிவேப்பிலை பறித்துக் கொண்டிருந்தபோது மின்சாரக்கம்பி அறுந்து விழுந்து மின்சாரம் தாக்கியதில் இருவரும் உயிரிழந்துள்ளனர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## சைபர் குற்றங்களுக்கு புதிய பொலிஸ் பிரிவு!



கொழும்பு,பெப்.9

கணினி சார்ந்த குற்றங்களைத் தடுப்பதற்காக புதிய பொலிஸ் பிரிவொன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுப்பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். நாளொன்றுக்கு 23 முதல் 25 வரையான சைபர் குற்றங்கள் பதிவாகின்றன. இது கணிசமான உயர்வு.

இந்தக் குற்றங்களை வினைத்திறனுடன் விசாரணை செய்து தீர்ப்பதற்குத் தேவையான புதிய தொழில்நுட்பம், விசேட அறிவு மற்றும் பொலிஸ் திணைக்களத்தை நவீனமயமாக்கும் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## சுற்றுலாவிகள் வருகை இவ்வாண்டில் 300,000+

கொழும்பு,பெப்.9

2026ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டிற்கு வருகைதந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 300,000ஐக் கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 317,381 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடக்கின் சுற்றுலாத்துறையில்

# 431 மையங்களை உள்ளடக்கி 5 ஆண்டுத் திட்டம் தயாரிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.9

**வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை அடுத்த ஐந்து ஆண்டுகளில் (2026 - 2030) அபிவிருத்தி செய்வதற்கான மூலோபாயத்திட்டம் வடக்கு மாகாண ஆளுநரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகத்தின் நிதியொதுக்கீட்டில், வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தினால் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

பீடாதிபதி கலாநிதி வை. நந்தகோபன் தலைமையிலான நிபுணர் குழுவினர் 5 மாவட்டங்களிலும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு இதனை வடிவமைத்துள்ளனர்.

இந்த ஆய்வின் மூலம் மாகாண ரீதியாக மொத்தம் 431 சுற்றுலா மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

அதன்படி யாழ்ப்பாணத்தில் 200 மையங்களும், முல்லைத்தீவில் 77 மையங்களும், கிளிநொச்சியில் 56 மையங்களும், வவுனியாவில் 49 மையங்களும், மன்னாரில் 49 மையங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 மையங்களும், மாகாணமட்டத்தில் மிக முக்கியமான 10 மையங்களும் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்திக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. சுற்றுலா வாய்ப்புகள், தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வடக்கின் சுற்றுலாவிலுள்ள பலம், பலவீனங்களை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான வழிகாட்டியாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. (க-66,27)

## சுதந்திரக்கட்சியைக் கட்டியெழுப்ப தலைமையில் மாற்றம் தேவை

### தயாசிறி தெரிவிப்பு



கொழும்பு,பெப்.9

சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்பவேண்டுமானால் அதன் தலைமைத்துவத்தில் மாற்றம் அவசியமானது என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் உள்ளூராட்சிசபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் என எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுக் கட்சியை ஒரு செயலிழந்த நிலையில் வைத்துள்ளது. தற்போது கட்சி அலுவலகத்தைக் கைப்பற்றி வைத்துள்ளவர்களுக்கு எந்தவொரு சட்டபூர்வமான அதிகாரமும் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான வழக்குத் தீர்ப்பு எதிர்வரும் 17ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. சுமார் 30 ஆண்டுகள் நாட்டை ஆட்சிசெய்த ஒரு மாபெரும் அரசியற்கட்சியின் தலைவிதியை இந்தத் தீர்ப்பு தீர்மானிக்கும்-என்றார். (ச-இ)



## பருத்தித்துறையில் 149 பேர் குருதித்தானம்

யாழ்ப்பாணம்,பெப்.9

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாபெரும் குருதித்தான முகாமில் 149 பேர் குருதித்தானம் செய்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் பருத்தித்துறை இராணுவத்தினரும், பருத்தித்துறைப் பிரதேச செயலகமும் இணைந்து இந்தக் குருதிக்கொடை முகாமை நடத்தின. (க-100)

## போர்க்கால ஆயுதங்கள் வாழைச்சேனையில் மீட்பு

கொழும்பு,பெப்.9

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடும்பிமலை காட்டுப்பகுதியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று ரொக்கட் லோஞ்சர் ரக ஆயுதங்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டவை சுவீடன் நாட்டுத் தயாரிப்பான 84 மி.மீ. ரகத்தைச் சேர்ந்த மூன்று ரொக்கட் லோஞ்சர்களாகும்.

இவை யுத்த காலத்தில் பாதுகாப்புக்காக விடுதலைப் புலிகளால் நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இவை மிகவும் பாதுகாப்பான முறையில் பொதியிடப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட இந்த ஆயுதங்கள் மேலதிக விசாரணைகளுக்காக வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச-இ)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச சமுர்த்தி வங்கியின் களஞ்சியத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பிரதேச சமுர்த்தி வங்கியின் 1.65 மில்லியன் ரூபா நிதியில் இந்தக் களஞ்சியத்தில் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது. (ச-9)

## வாகன இலக்கத் தகடுகள்; 3 மாதங்களுள் தீர்வு

கொழும்பு,பெப்.9

இலங்கையில் நிலுவையில் உள்ள சுமார் 4 இலட்சம் வாகன இலக்கத் தகடுகளை அடுத்த மூன்று மாதங்களுக்குள் அச்சிட்டு முடிக்கத் திட்டமிட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.


வாகன இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்கும் விநியோகிப்பதற்கும் தனியார் நிறுவனத்துக்கு 5 ஆண்டுகால ஒப்பந்தத்தை வழங்க அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது.

இனிவரும் காலங்களில் அச்சிடப்படும் புதிய இலக்கத் தகடுகள் சர்வதேச பாதுகாப்புத் தரங்களுக்கு ஏற்ப அமையும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.9

ஸ்ரீ சச்சிதானந்தா அறக்கொடை நிலையத்தினால் நடத்தப்பட்ட கைதடி, நாவற்குழிப் பிரதேச 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ஸ்ரீ சச்சிதானந்தா நூல் நிலைய மண்டபத்தில் அறக்கொடைச் செயலாளர் மு.பத்மரூபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கௌரவ விருந்தினராக ஆச்சிரம ஆலோசகர் நா.சத்தியநாதன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் சி.பவளகுமாரன், ஓய்வுநிலை அதிபர் செ. பேரின்பநாதன் ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் நெல் தேக்கம் புதிய கொள்வனவுகள் முடக்கம்!

## நெல் சந்தைப்படுத்தல் சபை அசமந்தம் ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு,பெப்.9**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோகத்தின் போது நெல்சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட 304 மெற்றிக்தொன் நெல் களஞ்சியசாலைகளில் தேக்கமடைந்துள்ளது. இதனால் தற்போது விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெல் சந்தைப்படுத்தல் சபையினர் 2025ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை உரியவகையில் களஞ்சியசாலைகளில் இருந்து வெளியேற்றியிருந்தால், தற்போது விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருக்காது. அரசால் நெற்கொள்வனவுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதும் நெல்சந்தைப்படுத்தல் சபையின் அசமந்தப்போக்கால், நெற்கொள்வனவில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனவே நெல் சந்தைப்படுத்தல் சபையினர் தொடர்ந்தும் அசமந்தப்போக்குடன் செயற்படாமல், விரைந்து விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு மேற்கொள்ளத் தவறினால் விவசாயிகளுடன் இணைந்து நெல் சந்தைப்படுத்தல் சபைக்கெதிராக பெரும்போராட்டம் மேற்கொள்ளப்படும் -என்றார். (க-246)




## மன்னார் கடற்கரையோரம் கண்டல் தாவரங்கள் நடுகை

மன்னார்,பெப்.9

சுற்றுச்சூழல் பாதுகாப்பை அடிப்படையாக் கொண்டு 'கடற்கரையோரங்களைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில், மன்னார் பிரதான பாலப்பகுதியின் கரையோரங்களில், கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

மன்னார் றொட்றாக் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில், உள்ளூர் இளைஞர்களும் இணைந்து கண்டல் தாவரங்களை நடுகை செய்தனர். றொட்டரிக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மரநடுகையை ஆரம்பித்து வைத்தனர். சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கண்டல் தாவரங்கள் குறித்த பகுதியில் நடப்பட்டுள்ளன. (க-56)



## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இணுவில் துர்க்கா அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,பெப்.9

கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இணுவில் துர்க்கா விளையாட்டுக்கழகம் சம்பியன் பெற்றது.

மானிப்பாயிலுள்ள கழக மைதானத்தில் நடத்தப்பட்ட போட்டியின் இறுதிச்சுற்றுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் உடுவில் அம்பாள் விளையாட்டுக்கழக A அணியை வெற்றிகொண்டு இணுவில் துர்க்கா விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை உடுவில் அம்பாள் B அணியும், நான்காமிடத்தைப் பிள்ளையார் விளையாட்டுக்கழகமும் பெற்றன.

கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழகத் தலைவர் மகிந்தன் தலைமையில் இடம்பெற்ற போட்டியில் மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினர் க. உஷாந்தன் விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு வெற்றிக்கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் பணப்பரிசில்களை வழங்கினார். (க-66)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.9

மருதங்கேணிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பொதுமக்களுக்காக விசேட நடமாடும் சேவை எதிர்வரும் 11ஆம் திகதி மு.ப.9 மணி முதல் பி.ப. 2 மணி வரை நடைபெறவுள்ளது. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் பொதுமக்களுக்கு நேரடியாகவும் எளிதாகவும் சேவைகளை வழங்கும் நோக்கில், இந்த விசேட நடமாடும் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. (ச-9)

### வவுனியா இளைஞரின்

## சக்கரநாற்காலிப் பயணம் மன்னாரில் நிறைவடைவு



மன்னார்,பெப்.9

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா சூடுவந்த குளம் பகுதியைச் சேர்ந்த மக்கின் முகமது அலியின் சக்கர நாற்காலிப்பயணம் 1500 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது.

இவர் கடந்த மாதம் 20 ஆம் திகதி மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு முன்பாக சக்கரநாற்காலியூடாக இலங்கை முழுவதும் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்தார்.

இலங்கை முழுவதும் சுமார் 1500 கிலோமீற்றருக்கும் அதிகமாக கடற்கரையோரமாக குறித்த பயணத்தை மேற்கொண்டார். (க-56)





தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்துக்குத் தலைவாசல் கோபுரம் கடந்து செல்லும் ஆலய முகப்பு வீதி, வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில் காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப்பகலில் வீட்டில் நகை, பணம் திருட்டு

யாழ்ப்பாணம்,பெப்.9



யாழ்ப்பாணம், நீர்வேலித் தெற்கு வில்லுமதவடி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில், பட்டப்பகலில் புகுந்த திருடர்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வீட்டின் உரிமையாளர்கள் காலையில் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்றிருந்தனர். பிற்பகல் அவர்கள் வீடு திரும்பியபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்தனர்.

வீட்டினுள் நுழைந்து சோதனையிட்டபோது, அங்கிருந்த அலுமாரிகள் உடைக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் மற்றும் பணம் களவாடப்பட்டமை கண்டறியப்பட்டது.

சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-17)


## மரண அறிவித்தல்



தோற்றம்: 24.11.1951 மறைவு: 07.02.2026

### மதியாவர்ணம் பத்மநாதன்

தாவடி வடக்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மதியாவர்ணம் பத்மநாதன் அவர்கள் கடந்த 07.02.2026 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மதியாவர்ணம் - விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவகொழுந்து தம்பதியரின் அன்புமருமகனும், பாஸ்கரதேவி அவர்களின் பாசமிகு கணவரும், சறோஜினிதேவி (கனடா), சாரதாதேவி (கனடா) சாவித்திரிதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற ரகுவரன் (கனடா), பரராசசிங்கம் (கொழும்பு), சிவதாசன் - விஜயலட்சுமி (கனடா), சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2026) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்:
ப.பாஸ்கரதேவி
(மனைவி)
076 157 36 85

(CS 31181) A

## மரண அறிவித்தல்

மலர்வு 23 . 05 . 1943

உதிர்வு 07 . 02 . 2026



### நாகலிங்கம் சாம்பசிவம்

(வர்த்தகர் - கொழும்பு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சாம்பசிவம் அவர்கள் 07.02.2026 சனிக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசபூரணியின் அருமைக் கணவரும், கவிதா (ஆசிரியை - யா/நயினை ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்), மயூரன் (ஜேர்மனி), பிரகலாதன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தரூபன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை, (கனடா), திவ்யா (ஜேர்மனி), சுகன்யா (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சிவக்கொழுந்து, சிவப்பிரகாசம் (பிரான்ஸ்), சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணி, சந்திரசேகரம், இராசசேகரம் மற்றும் செல்வபூரணி (கனடா), காலஞ்சென்றவர்களான நவரத்தினம், நடராஜா மற்றும் விஜயகுமாரி, சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் கமலாசினிதேவி, அரியரட்ணம் (கனடா) ஆகியோரின் சகலனும், துஷாந், நிஷாந், கஜித், சஜித், தர்ஜின், திவிசன், ஆதவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2026) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது நயினாதீவு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனகிரியைக்காக நயினாதீவு சல்லிப்பரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு 5 ஆம் வட்டாரம்
கவிதா - 076 291 4660
மயூரன் - 0049 1749 823473
பிரகலாதன் - 0016 7866 34102
சாந்தன் - 0016 4730 94740

தகவல்:
குடும்பத்தினர்

(CS60689) N-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 10 . 1990

இறப்பு 06 . 02 . 2026



### தேவதாஸ் புருஷோத்

(Field Officer - Future Capital Invesment)

பன்னாலை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சேந்தாங்குளம் - விளான் பிரதான வீதி, அக்கத்தானை, இளவாலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தேவதாஸ் புருஷோத் (கண்ணன்) 06.02.2026 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தேவதாஷ் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - சின்னத்தங்கம், ஐயாத்துரை - செலவநாயகம் ஆகியோரின் பாசமிகு பேரனும், திவ்யா (UK), தனுஷா (UK), கோகுலன் (Farm Manager - KK Organic Farm, Mankulam) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுகந்தன்(UK), மயூரன் (UK)ஆகியோரின் மைத்துனனும், சுதிவ், வர்ணஜா, தன்விகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவனேஸ்வரி, செல்வராணி, கிருபாணி ஆகியோரின் மருமகனும், விநாயகமூர்த்தி, கிருபாகரன், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணமூர்த்தி, விக்னேஸ்வரமூர்த்தி, சிவமூர்த்தி மற்றும் விக்னேஸ்வரமூர்த்தி, விக்னேஸ்வரி, இராஜகுமாரி, சௌந்தேஸ்வரி, அமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேந்தாங்குளம் - விளான் பிரதான வீதி,
அக்கத்தானை, இளவாலை.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு: சகோதரன்
075 518 3356

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 18.12.1956 இறப்பு : 25.01.2022

### அமரர் திரு. இராசா பூபாலசந்திரன்

கடந்த 25.01.2022 தேய்பிறை அஷ்டமி தினத்தன்று இறைபதம் அடைந்த எமது தந்தையாரின் நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி இன்று (09.02.2026) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்றைய தினம் முற்பகல் 11.30 மணியளவில் எமது மதியபோசன விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
075 831 2740

(cr 47038) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பொதுமைதானத்தை புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்

## விளையாட்டுக்கழகங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.9

**தென்மராட்சிப் பிரதேசத்தின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் வகையில், கைவிடப்பட்ட நிலையில் உள்ள சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பிரதேச விளையாட்டுக் கழகங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**


சாவகச்சேரி நகரை அண்டிய தனங்கிளப்பு வீதியில் அமைந்துள்ள இந்த மைதானம், கடந்த 15 வருடங்களாகப் பயன்பாடின்றிக் கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக மாறியுள்ளது.

முறையான மைதான வசதி இல்லாததால், பிரதேச விளையாட்டுக் கழகங்கள் வீதிகளிலும் கோவில் முற்றங்களிலும் பயிற்சிகளில் ஈடுபட்டுவருகின்றன.

சுமார் 10 வருடங்களுக்கு முன்னர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு 500 மில்லியன் ரூபா செலவில் மைதானத்தை நவீனப்படுத்த அன்றைய தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனுடன் ஒப்பந்தம் செய்தனர்.

எனினும், ஒப்பந்தம் செய்யப்பட்டு பல தசாப்தம் கடந்தும் இதுவரை புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

தென்மராட்சிப் பிரதேச செயலகப் போட்டிகள், பாடசாலை மெய்வன்மைப் போட்டிகள் மற்றும் உதைபந்து, கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நடைபெற்ற பெருமைமிக்க இந்த மைதானம் புனரமைக்கப்பட்டால், தேசிய மட்டத்தில் பல சாதனையாளர்களை உருவாக்கமுடியும் என்று விளையாட்டுக்கழகங்கள் சுட்டிக்காட்டின. (ச-9)



# சட்டவிரோத மணல் அகழ்வு; வாகனங்கள் கைப்பற்றல்

கிளிநொச்சி,பெப்.9

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 2 டிப்பர்கள் மற்றும் 2 உழவு இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கல்லாறுப் பகுதியில் வனவிலங்குகள் மற்றும் பறவைகள் சரணாலயம் காணப்படுவதால் அந்தப் பகுதியில் இருந்து மணல் அகழ்வு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

சிலர் சட்டவிரோதமான முறையில் இரவு வேளைகளில் மணல் அகழ்வில் ஈடுபட்டு, வெளிமாவட்டங்களுக்குக் கொண்டுசெல்கின்றர் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், குறித்த வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தடயப்பொருள்கள் கிளிநொச்சி நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-113)

# அலங்கார உற்சவத்தில் சொற்பொழிவும் பரிசிலும்

யாழ்ப்பாணம்.பெப்.9

புத்தூர் கலைமதி ஆலடி முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர் வரும் 15ஆம் திகதி மகாசிவராத்திரி அன்று தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் அதையடுத்து பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அலங்கார உற்வத்தில் நேற்றுமுன்தினம் 'தேவர்களும் அசுரர்களும்' எனும் தலைப்பில் சைவ சமய சொற்பொழிவு இடம்பெற்று மாணவர்களுக்கு பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்பட்டன. சைவச் சொற்பொழிவை ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் நிகழ்த்தினார். (ச)



# யாழ்.போதனா மருத்துவமனைக்கு இன்சுலின் மருந்துகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்.போதனா மருத்துவனையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்களுக்குப் பயன்படக்கூடியவாறு ஒரு தொகுதி இன்சுலின் ஊசிமருந்து கையளிக்கப்பட்டுள்ளது. யாழ்.நீரிழிவுக் கழகத்தின் கோரிக்கைக்கமைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஒரு இலட்சம் ரூபா நிதி அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அந்த நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஊசிமருந்து யாழ். நீரிழிவுக் கழகத்தினரால் மருத்துவ நிபுணர் ம.அரவிந்தனிடம் கையளிக்கப்பட்டது. (க)



தரம் 1 புதுமுக மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா யாழ். புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயத்தில் அதிபர்.சி. சிவநேந்திரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் செயலாளர் கருணாகரன் நாவலனின் நிதியுதவியில் பாடசாலை வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டதுடன் இலங்கை வங்கியின் வேலணைக் கிளையின் ஊடாகப் புதுமுக மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-66)



பூநகரி வினாசியோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு டென்மார்க்கில் வாழும் பிருந்தாபரனின் அன்பளிப்பில் ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. (ச-20)



பளை இத்தாவில் வேம்பொடு கேணி சீ.சீ.த.க. பாடசாலையில் முகமாலை முகாம் படையினரால் அண்மையில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. (ச-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தலைமுறையினர் அறிவாற்றலில் மந்தம்

வொஷிங்டன்,பெப்.9

கடந்த 100 ஆண்டுகளாகத் தலைமுறைக்குத் தலைமுறை மனிதனின் அறிவாற்றல் அதிகரித்து வந்த நிலையில், தற்போது முதன்முறையாக அது குறையத் தொடங்கியுள்ளதாக நரம்பியல் விஞ்ஞானி ஜாரெட் ஹோர்வத் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

குறிப்பாக, 80 மற்றும் 90களில் பிறந்தவர்களை விட 1997- 2012 காலகட்டத்தில் பிறந்தவர்களின் அறிவாற்றல் அளவு குறைவாக இருப்பதாக அந்த ஆய்வு கூறுகிறது. புத்தகங்கள் வாசிப்பதை முழுமையாகத் தவிர்த்துவிட்டு, அதிக நேரத்தைச் சமூக வலைத்தளங்களில்செலவிடுவது ஆழமாகச் சிந்திக்கும் திறனைப் பாதித்துள்ளது.

நீண்ட கட்டுரைகளை வாசிக்காமல், சுருக்கமான வீடியோக்களை மட்டும் பார்ப்பதால் ஒரு விஷயத்தில் நீண்ட நேரம் கவனம் செலுத்த முடியாமல் போகிறது.

தொழில்நுட்ப வசதிகள் அனைத்தையும் எளிதாக்கி யுள்ளதால், சொந்தமாகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் மற்றும் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் திறன் குறைந்துள்ளது.

தகவல்களை ஆழமாகத் தேடாமல், மேலோட்டமாகப் பார்க்கும் தன்மை அறிவாற்றல் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## கிவுல் ஓயாத்...

மைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கிவுல் ஓயாத் திட்டம் 2007ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு, 2011ஆம் ஆண்டு முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. கடந்த காலகத்தில் ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, கோத்தாபய ராஜபக்ச ஆகிய அனைவரும் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

துரதிர்ஷ்டவசமாக இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் முறையாகக் காணப்படவில்லை. அதனால் இந்தத் திட்டத்தை முன்நகர்த்த முடியவில்லை. இந்தத் திட்டம் கொழும்பில் இருந்து திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுவதால் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு அச்சங்கள் காணப்படுகின்றன.

1983ஆம் ஆண்டிலிருந்து நீர்பாசனத் திட்டங்களைப் பயன்படுத்தி குடியேற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான அச்சம் ஏற்படுவது இயல்பானது. ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் நீர்ப்பாசனத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களில் வாழ்ந்த மக்கள், அங்கு வாழ முடியாது வெளியேறிவிட்டார்கள் என்பது தான் யதார்த்தமாகும்.

அவர்களின் வாழ்வாதாரத்துக்கான நீர் வசதிகள் இல்லாததால் அவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள்.

தற்போது கரைதுறைப்பற்று, வவுனியா வடக்கு போன்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் விவசாயம் செய்கின்றார்கள்.

அதேபோன்று ஜானகபுர உள்ளிட்ட பகுதிகளில் வாழும் சிங்கள மக்களும் விவசாயம் செய்கின்றனர். அவர்களின் வாழ்வாதாரத்தைக் கவனத்தில் கொண்டு தமிழ் மக்களையும் உள்ளீர்த்து நாம் கிவுல் ஓயாத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்த திட்டத்தின் ஊடாக எவ்விதமான குடியேற்றங்களும் செய்யப்படமாட்டாது என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றேன் - என்றார். (அ-எ-இ)

## யாழ்ப்பாண...

யில் வருகையாளர்களின் மொத்த எண்ணிக்கையை விடவும், கடந்த ஆண்டில் சுமார் 33 ஆயிரத்து 431 வருகையாளர்கள் அதிகம் என்று தெரிவித்துள்ள அந்த அறிக்கை, இது ஒரு புதிய உச்சம் என்று குறிப்பிட்டுள்ளது. கடந்த ஆண்டு ஆயிரத்து 138 சர்வதேச விமான இயக்கங்கள் நடந்துள்ளன என்றும், கடந்த ஜனவரியில் தினசரி 7 விமானங்கள் இயங்கிச் சாதனை படைக்கப்பட்டது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று மைல்கல் விமான நிலைய ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கும், சர்வதேச விமான நிறுவனங்கள் யாழ்ப்பாண நுழைவாயில் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்குமான சான்றாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-66)

## மழைக்கு...

வும். எதிர்வரும் 12ஆம் திக முதல் 15 ஆம் திகதிவரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

மழையற்ற, மழையுள்ள நாள்களைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் அறுவடை மற்றும் நெல் உலர விடும் செயற்பாடுகளை மேற்கொள்வது சிறந்தது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர்.நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-எ-66)


## மரண அறிவித்தல்

### செல்வத்துரை சட்டநாதர்

**(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், ஆசிரியர்)**

**தோற்றம் : 09.04.1946** **மறைவு : 08.02.2026**



பருத்தித்துறை மாதனையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்துரை சட்டநாதர் அவர்கள் நேற்று (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

காலஞ்சென்ற செல்வத்துரை தங்கம்மா, தம்பதியரின் புதல்வனும், சதாசிவம் இராசம்மா தம்பதியரின் சுவீகர புத்திரனும், சிற்சபேசன், கனகசபேசன், தர்மசபேசன் ஆகியோரின் உணர்நிலை சகோதரனும், கந்தசாமி - இராசலட்சுமி தம்பதியரின் மருமகனும், விமலசோதி அவர்களின் அன்புக் கணவரும், கோபிதன் (D'Signarts), கௌதமி (DFCC Bank சுன்னாகம்) ஆகியோரின் தந்தையும், சங்கீதா (Commercial Bank Regional office - Jaffna), அருண் (NTB Nelliady) ஆகியோரின் அன்பு மாமனாரும், அகரன், சிவயன், அகன்யன், அகர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும், விமலதாஸ் (அமரர்), விமலராணி (ஓய்வுபெற்ற தையல் போதனாசிரியர்), விமலரட்ணம் (UK), விமலரஞ்சினி (UK) ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீனிவாசன், கிரிசாந்தி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2026) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு இடம்பெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**55/2, காளிகோவிலடி,**
**அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 224 1772**

(CS 31184) A

## மரண அறிவித்தல்



### கதிரவேலு சிறிஸ்கந்தராசா

சித்துங்கேணியை பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்டிருந்த கதிரவேலு சிறிஸ்கந்தராசா அவர்கள் கடந்த 07.02.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு -சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் -அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் (தனம்) பாசமிகு கணவரும், ஸ்ரீறஜிதா (ஜேர்மன்), ஸ்ரீறமா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார் (கண்ணன்-பிரான்ஸ்), ஜெயகரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வினோஜித், அஹானா, சரண், சஹானா ஆகியோரின் பாசமிகு பேரனாரும், அமரர் வரதராசா, இராசமணி (மலர்), நவமலர் (நவம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் இராசரத்தினம் (கந்தசாமி), மகாதேவன் (தேவன்), தனேஸ்வரி (கிளி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2026) செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**

தகவல்.
**குடும்பத்தினர்.**

(CS 31...)

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**21.05.1941**



**மறைவு**
**08.02.2026**

### திரு.வயிரமுத்து சண்முகநாதன்

**(சாவகச்சேரி-முன்னாள் ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்)**

1ம் கட்டை, கல்வயல் வீதி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.வயிரமுத்து சண்முகநாதன் அவர்கள் நேற்றைய்தினம் (08-02-2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரமுத்து தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசமணி இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், இந்திரநாதன், இந்திரவர்மன், நிஷாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரி (ஆசிரியர்-யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), சுபாஷினி (ஆசிரியர்-யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), இந்துஜா (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லகிர்தன், அபிநஜன், காவியா, ஜெய்சியா, அக்சயி, ஆரியன், ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வராணி, அருந்தாவதி, சியாமளா, விமலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2026) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
**077 780 6245 - 076 306 0175**

(CS 31182 -GD)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிவுல் ஓயாத்...

டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கொழும்பில் இருந்து வரவுள்ள மகாவலி அதிகார சபையின் அதிகாரிகள் குழுவொன்று கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான விளக்கக்காட்சிகள் அடங்கிய தெளிவுபடுத்தல்களை முன்னெடுக்கவுள்ளது என்றும், சந்தேகங்களுக்கான பதிலளிப்புக்களை வழங்கவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

வவுனியா வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிர்ப்புகள் வெளிக்கிளம்பியுள்ள நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பாக நெடுங்கேணி பிரதேச செயலக அதிகாரிகளும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக அதிகாரிகளும் கள ஆய்வுப் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் கண்டறியும் வகையிலேயே இந்தக் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தத் திட்டத்துக்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை அங்கீகாரம் வழங்கிய நிலையில், இந்தத் திட்டம் தொடர்பான கள ஆய்வுநடவடிக்கைகள் முதலில் முன்னெடுக்கப்படவில்லை என்றும், தற்போது இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளதால், சந்தேகங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் கள ஆய்வு நடவடிக்கைகள் அவசரகதியில் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்தவின் பங்கேற்புடன் எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான இறுதிக் கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## தேசிய...

இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைக்கும் திட்டம் 5 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அவற்றில் 4 கட்டங்கள் தற்போது வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. அடிப்படை கைமாற்றல் திட்டம், வருடாந்த மின் கொள்முதல் திட்டம், நீண்டகால மின்னுற்பத்தித் திட்டம் மற்றும் நீண்டகால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் ஆகிய கட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று மின்சார சபை மறுசீரமைப்புச் செயலணியின் தலைவர் புபுது நிரோஷன் அண்மையில் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்டமான தேசிய மின்சக்திக் கொள்கை மற்றும் தேசிய மின் கட்டணக் கொள்கையைத் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், அது இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், மின்சார சபையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் வெளியிடுவார். இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மின்சாரச் சட்டம் இரத்துச் செய்யப்படும். அதன் பின்னர், இந்தமாத இறுதிக்குள் இலங்கை மின்சாரசபை கலைக்கப்படும் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-இ)

## செம்மணி...

என்று கருதப்படும் என்புக்கூடுகளும் இனங்காணப்பட்டிருந்தன. அத்துடன் சான்றுப்பொருள்கள் பலவும் மீட்கப்பட்டிருந்தன.

மழைகாலம் ஆரம்பித்த பின்னர், அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட இடங்களில் வெள்ளம் தேங்கியிருந்ததால் அகழ்வு நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் அங்கு தேங்கியுள்ள வெள்ளத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் அகற்றப்பட்டு மூன்று வாரங்களின் பின்னர் அகழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் நடைபெற்றுவரும் நிலையில், நீதிமன்றில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய அகழ்வுப் பணிகள் தொடரும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26)

## குழு...

செய்யப்பட்டுள்ளார். பெரியவிளான் மற்றும் பண்டத்தரிப்புப் பிரதேசங்களைச் சேர்ந்த இருவரிடையே ஏற்பட்ட மோதலை அடுத்து, அது குழு மோதலாக மாறியது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த மோதலில் இருவர் காயமடைந்துள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்தபொலிஸார் ஒருவரைக் கைது செய்த நிலையில் ஏனையோர் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-27)

## பேராசிரியராக...

முகாமைத்துவ துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை கடந்த சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த நிதி முகாமைத்துவ துறையைச்சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சசீலா பாலகோபியின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, நிதி முகாமைத்துவ துறையைச்சேர்ந்த சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி சசீலா பாலகோபி நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (அ-எ-இ)

## அரசியல்...

19ஆம் திகதி கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுவிட்ஸர்லாந்தின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன தொடர்பாக இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் செயலமர்வொன்று கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதிவரை 21 ஆம் திகதி வரை சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்றது.

இலங்கை சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்தின் ஏற்பாட்டில் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டிருந்தது.

இந்தச் செயலமர்வில் சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிட்ஸர்லாந்தின் கூட்டாட்சி (சமஷ்டி) முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. அதனுடன் தொடர்புடைய முக்கியமான கட்டமைப்புக்களுக்கான கள விஜயங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புகள் என்பனவும் இடம்பெற்றன.

அதில் பங்கேற்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பிரதிநிதிகளிடம் கேட்டறிந்த இலங்கைக்கான சுவிஸ்ஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ற், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனையும் சந்தித்து இந்தச் செயலமர்வு தொடர்பில் விளக்கமளித்திருந்தார். தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தைப் பொறுத்தமட்டில் சகல தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம் என்ற செயலமர்வில் கலந்துகொண்ட தமிழ்ப்பிரதிநிதிகளால் தூதுவர் சிறி வோல்ற்றிடம் எடுத்துரைக்கப்பட்டது.

சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஒருங்கிணைப்பில் ஒரு கூட்டு சந்திப்பை நடத்துவதற்கு தமிழ்த்தேசியக் கட்சிகள் உடன்பட்டதை அடுத்து, அதை எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ற்றின் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்ச் சந்திப்பின்போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சகல தமிழ்த்தரப்புக்களும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வருவது தொடர்பாகக் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## ஜெனிவாவுக்குச்...

செல்லவுள்ளது. மாகாணசபைத் தேர்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பன இலங்கையில் நீடித்துவரும் நிலையில், ஜெனிவா செல்லவுள்ள குழு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தேசிய நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பில் விளக்கமளிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் தேசிய நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்றை ஜெனிவாவில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ள அரசாங்கம், அதற்கு முன்னதாக பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது. (அ-எ-இ)

## சங்கிலியன்...

தரம் 6 மற்றும் தரம் 10 வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் தமிழ் மன்னர்கள் தொடர்பாகவும், தமிழ் இராசதானிகள் தொடர்பாகவும் உள்ள விடயங்களை சிங்கள பாதுகாப்புச் சம்மேளனம் என்ற சிங்கள அமைப்பு கேள்விக்குட்படுத்தியுள்ளதை அடுத்து, அவை தொடர்பான நிபுணத்துவ அவதானிப்புக்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையிடம் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு கோரியுள்ளமையே தமிழ் மக்கள் மத்தியில் இவ்வாறான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி கல்வி அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள அந்த சிங்கள அமைப்பு, தரம் 6 மற்றும் தரம் 10 வரலாற்றுப் பாடப் புத்தங்களில் தவறான வரலாற்றுத் தகவல்கள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளது.

சங்கிலி மன்னன் தமிழ் மன்னன் அல்ல என்றும், சிங்கள பௌத்த மன்னன் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாண இராசதானி இருக்கவில்லை என்றும், யாழ்ப்பாணம் சிங்கள இராசதானிக்குள்ளேயே காணப்பட்டது என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் பூர்வகுடிகளாக சிங்கள மற்றும் வேட இனத்தவரே இருந்தனர் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளதுடன், போர்த்துக்கீசர் இலங்கை வரும்போது இந்த இரு இனங்களுமே காணப்பட்டன என்றும் கூறியுள்ளது. இவ்வாறாக தமிழர்களின் வரலாற்று விடயங்கள் தொடர்பில் பலவற்றைச் சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பு, வரலாற்றுப் பாடநூல்களில் இவற்றுக்கு மாறாக பொய்யான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளதுடன், பாடப்புத்தங்களில் உள்ள விடயங்களை மாற்றவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில், தரம் 6 மற்றும் தரம் 10 வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் சேர்க்கப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பாக சிங்கள பாதுகாப்பு சம்மேளனம் என்ற அமைப்பு கேள்வியெழுப்பியுள்ளது. அந்த விடயங்களைப் பரிசீலித்து, அது தொடர்பான தங்களின் நிபுணத்துவ அவதானிப்புக்களை வழங்கக் கோருகின்றோம் என்றுள்ளது.

தமிழ் மன்னர்கள் தொடர்பாகவும், தமிழ் இராசதானிகள் தொடர்பாகவும் பல்வேறு தொல்பொருள் ஆதாரங்கள் இருக்கும் நிலையிலும், அவை கடந்தகாலங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கும் நிலையிலும் திடீரென ஒரு சிங்கள அமைப்பின் பெயரில் வெளியாகியிருக்கும் கடிதத்துக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களையும், அச்சங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் தோல்விகளில் விடை காணுங்கள்!

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு,பெப்.9

அரசியலமைப்பு மறுசீரமைப்புச் செயன்முறை குறித்துப் பேசப்படுவது ஆரோக்கியமானதொரு விடயம் என்றாலும், கடந்த காலங்களிலும் இதுபற்றி பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு பல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

முன்னைய முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தன என ஆராய்ந்து, அதற்கான காரணத்தைக் கண்டறியாமல் இந்த விடயத்தில் முன்னோக்கி நகரமுடியாது என பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பு மறுசீரமைப்புச் செயன்முறை குறித்துப் பேசப்படுவது ஆரோக்கியமானதொரு விடயம் என்றாலும், கடந்த காலங்களிலும் இதுபற்றி பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு பல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

அவ்வாறிருக்கையில் முன்னைய முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தன என்று நிச்சயமாக ஆராயவேண்டும். அந்தத் தோல்விக்கான காரணத்தைக் கண்டறியாமல் இந்த விடயத்தில் முன்னோக்கி நகரமுடியாது.

பெரும்பான்மையானோர் ஒருமித்த நாட்டையும், சிறுபான்மையானோர் சமஷ்டி முறைமையையும் வலியுறுத்தும் போக்கும், அதுசார்ந்த பிரிவினையும் எமது நாட்டில் பல தசாப்தகாலமாக நிலவுகின்றது. அந்தப் பிரிவினைகள் முன்னைய அரசியலமைப்பு முன்மொழிவுகளிலும் பிரதிபலித்தன.

ஆனால் சிங்களவர்கள் ஏன் சமஷ்டியை எதிர்க்கிறார்கள் என்பது குறித்து போதிய ஆய்வுகளோ, தெளிவுபடுத்தல்களோ இல்லை. இந்த விடயத்தில் சிங்கள வர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் முன்னோக்கி நகர இயலாது.

ஏற்கனவே புதிய அரசியலமைப்புத் தொடர்பில் பல்வேறு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கும் பின்னணியில், மீண்டும் ஒட்டுமொத்த நாடும் ஏற்றுக்கொள்ளாத புதியதொரு ஆவணத்தை உருவாக்குவதில் எவ்வித பயனுமில்லை என்பதே எனது நிலைப்பாடாகும் - என்றார். (ச-இ)

# சிரமதானம்



யாழ்ப்பாணம்,பெப்.9

பருத்தித்துறை பொலிஸாரின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பிரதேசசபை இணைந்து பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கிராமக்கோடுச் சந்தியிலிருந்து ஆனைவிழுந்தான் சந்திவரையும், ஆனைவிழுந்தான் சந்தியிலிருந்து வராத்துப்பளைச் சந்திவரையும் துப்பரவுசெய்யும்பணி முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்தச் சிரமதானப்பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ச-27)

# அரச மருத்துவ அதிகாரிகளின் பணிப்புறக்கணிப்பு தீவிரம்

கொழும்பு,பெப்.9

நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் தீர்க்கப்படாத தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி, தற்போது முன்னெடுத்து வரும் தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்தப் போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி நாடு தழுவிய ரீதியிலான அனைத்து சுகாதார அதிகாரிகளையும் கொழும்புக்கு அழைத்து, அடுத்தகட்டப் போராட்டம் குறித்த இறுதிமுடிவை எடுக்க சங்கம் தீர்மானித்துள்ளது.

மருத்துவர்கள் தமது வழமையான கடமைகளுக்கு அப்பாற்பட்ட மேலதிகப் பணிகளிலிருந்து விலகியுள்ளனர்.

இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு அரசாங்கமும் சுகாதார அமைச்சருமே பொறுப்பேற்கவேண்டும் என சங்கம் வலியுறுத்தியுள்ளது. நிதி அமைச்சுடன் உடனடிப் பேச்சு நடத்தப்படாவிட்டால், போராட்டத்தை மேலும் வலுப்படுத்தப் போவதாகவும் இந்தச் சங்கம் அறிவித்துள்ளது. (ச-இ)

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர விடுதிக்கு கீழ்க்கண்ட பணிகளுக்காக அனுபவமுள்ள பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்

1. சுத்திகரிப்பு பணியாளர்
2. பாதுகாப்பு பணியாளர்
3. Room Attendant
4. Store Keeper

தகுதியும், அனுபவமும் உள்ளவர்கள் கீழே கொடுக்கப்பட்ட எண்ணிற்கு தொடர்புகொள்ளவும்

E-Mail - hrvalampuri@gmail.com
Phone No- 076 624 8529 / 076 315 1060

(CS 31172) N-1

# இந்திய வரைபடத்தை மாற்றியமைத்த ட்ரம்ப்

### பாகிஸ்தானுக்கு பலத்த அடி

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே எட்டப்பட்டுள்ள புதிய வர்த்தக ஒப்பந்தத்தை அறிவிக்கும்வகையில், இந்தியாவின் வரைபடத்தை அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் வெளியிட்டுள்ளது. அமெரிக்க அரசு அதிகாரபூர்வமாகப் பகிர்ந்துள்ள இந்த வரைபடத்தில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் சீனாவால் உரிமை கோரப்படும் அக்சய் சின் ஆகிய பகுதிகள் முழுமையாக இந்தியாவின் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டுள்ளன.

கடந்த பல தசாப்தங்களாக அமெரிக்கா வெளியிட்டு வந்த வரைபடங்களில் இந்தப் பகுதிகள் 'சர்ச்சைக்குரியவை' என்றே குறிக்கப்பட்டிருக்கும். ஆனால், தற்போது ட்ரம்ப் நிர்வாகம் எவ்விதப் பிரிவினையுமின்றி முழுமையான இந்தியாவை வரைபடத்தில் காட்டியிருப்பது, அமெரிக்காவின் வெளியுறவுக்கொள்கையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மாற்றத்தைக் குறிக்கிறது.

இது பாகிஸ்தான் மற்றும் சீனாவிற்கு விடுக்கப்பட்ட ஒரு தெளிவான எச்சரிக்கையாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை "காஷ்மீர் எப்போதுமே இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிதான். இதற்குப் பிற நாடுகளின் அங்கீகாரம் தேவையில்லை" என்று இந்தியா தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த வரைபடத்துக்கு சீனாவும் பாகிஸ்தானும் கடும் கண்டனங்களைத் தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
30 . 07 . 1965



இறப்பு
08 . 02 . 2026

### திருமதி பாலசுப்பிரமணியம் நித்தியகலா

நீர்வேலி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் நித்தியகலா அவர்கள் நேற்று (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் பாலசுப்பிரமணியம் அவரின் மனைவியும், காலஞ்சென்ற முத்தையா அம்மா பிள்ளை ஆகியோரின் மகளும், பொன்னுத்துறை பாக்கியம் ஆகியோரின் மருமகளும், அமரர் கிரிதாஸ், ராஜீதா, அமரர் ஜீத்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேஸ்கண்ணாவின் (சுவிஸ்) மாமியும், குணபாலசிங்கம் (இலங்கை), அமரர் மகாலிங்கம், குணசேகரம் (கனடா), கலாநிதி (கனடா), அமரர் ஞானசேகரம் (பிரான்ஸ்), கலைவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல 10.00 - 12.00 மணிவிரை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
0041 78 730 6518

(CS) A

# சிறுநீரகம் செயலிழந்தவருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நிதி



வவுனியா,பெப்.9

வவுனியா இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட இளம் குடும்பத் தலைவருக்கு மாற்று சத்திரசிகிச்சைக்காக ஒரு பகுதி நிதியாக 75 ஆயிரம் ரூபா நிதி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டுள்ளது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று நிதி உதவியை வழங்கிவைத்தார். (ச-66)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111   செய்தி : news@uthayan.com   விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org